**செய்தி வெளியீடு எண்: 957** **நாள்: 28.12.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (28.12.2018) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை மற்றும் கட்டட அமைப்புக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 131 உதவிப் பொறியாளர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

நீர்வள ஆதாரத் துறையானது விவசாய பாசனத்தினை மேம்படுத்துதல், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்தல், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டு புதிய நீராதாரங்களை உருவாக்குதல், போன்ற பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பானது, அரசு அலுவலகக் கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள், நீதிமன்ற கட்டடங்கள், அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள், பள்ளிக் கட்டடங்கள், அரசுக் குடியிருப்புகள் ஆகிய பொது கட்டடங்களை கட்டுமானம் செய்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேற்கண்ட, நீர்வள ஆதாரத்துறை மற்றும் கட்டட அமைப்புப் பணிகள் தங்குதடையின்றி செயல்படுத்திட, அத்துறைகளில் காலியாகவுள்ள உதவி பொறியாளர் (சிவில் மற்றும் மின்) பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை மற்றும் கட்டட அமைப்பில் காலியாக உள்ள 91 உதவிப் பொறியாளர் (சிவில்) மற்றும் 40 உதவிப் பொறியாளர் (மின்) பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட 131 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நீர்வள ஆதாரத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (பொது) திரு.எம். பக்தவத்சலம், முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.எஸ். மனோகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**